## 6 ஆயிரம் பேருக்கு மருத்துவ பரிசோதனை:

# 50 சதவீத மக்களுக்கு ரத்தத்தில் கொழுப்பு சத்து அதிகம்

## டாக்டர் தணிகாசலம் வெளியிட்ட ஆய்வில் திடுக்கிடும் தகவல்

சென்னை, பிப்.13-

6 ஆயிரம் பேர்களை மருத்துவ பரிசோதனை செய்ததில் 50 சதவீதம் பேருக்கு ரத்தத்தில் கொழுப்பு சத்து அதிகம் உள்ளது என்று டாக்டர் தணிகாசலம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் திடுக்கிடும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழக இருதய சிகிச்சை துறை தலைவர் டாக்டர் எஸ்.தணிகாசலம் தலைமையில் 6 ஆயிரம் பேர்களை மருத்துவ ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த ஆய்வு குறித்து அவர் நேற்று விழாவில் பேசியதாவது:-

### ஆய்வு முடிவு

3 வருடங்கள் ஆய்வு செய்ய முடிவு செய்து, 2 வருட ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

50 சதவீத மக்கள் ரத்தத்தில் கொழுப்பு சத்து அதிகம் உள்ளவர்களாக உள்ளனர். 17.3 சதவீதம் பேருக்கு ரத்த உயர் அழுத்தம் இருக்கிறது. 16 சதவீதம் பேருக்கு மன அழுத்தம் உள்ளது. 13 சதவீதம் பேருக்கு அதிக உடல் எடையுடன் கூடிய கொழுப்பு சத்து உள்ளது. 18 சதவீதம் பேருக்கு உப்பு சத்து அதிகம் இருக்கிறது.

6 ஆயிரம் பேர்களில் 250 பேருக்கு மட்டுமே நோய் இல்லை. மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு மருத்துவ குறை உள்ளது.

மருத்துவ ஆய்வில் நோய் இருக்கிறது என்று தெரிந்தவர்களில் 90 பேர் இந்திய மருத்துவ சிகிச்சைக்கு சம்மதித்தனர். அவர்கள் 6 மாதம் மதுமேகா சூரணம் சாப்பிட்டும், முறையாக உடற்பயிற்சி செய்தும், யோகா, தியானம் ஆகியவற்றை செய்தும் அவர்கள் தற்போது நோய் அற்ற நிலையில் உள்ளனர்.

### சீராக உள்ளது

அதாவது உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் ரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்கிறார்கள். ரத்தத்தில் சர்க்கரை உள்ளவர்களுக்கு சர்க்கரை அளவு சீராக உள்ளது. கெட்ட கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்களுக்கு நல்ல கொலஸ்ட்ரால் அதிகரித்து கெட்ட கொலஸ்ட்ரால் குறைந்துள்ளது.

இந்திய மருத்துவம் அல்லது ஆங்கில மருத்துவத்தை கடைப்பிடித்து நோய் இன்றி வாழவேண்டும். எல்லாவற்றுக்கும்மேலாக நோய் வரும் முன் காப்பதே நல்லது.

இவ்வாறு டாக்டர் எஸ்.தணிகாசலம் கூறினார்.